# ஆனையிறவு தடைமுகாம் பகுதியில் நேற்று அதிகாலை மோதல் ஆரம்பமானது

ஆனையிறவு தடைமுகாம் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் இப்பகுதியில் பாரிய மோதல்கள் இடம் பெறாதிருந்தது. ஆனால் விமானங்கள் அடிக்கடி பறந்தவண்ணமிருந்தன. தடைமுகாம் பகுதி மோதலையடுத்து புலிகளால் சுற்றிவளைக்கப்பட்ட பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிவரை ஒரே ஷெல் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. ஆனையிறவில் நேற்றும் பல படையினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாத நிலையிலும், உணவு வசதிகள் இன்றியும் இங்கு படையினர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

79 ப11,43,50

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 235 பிரசோற்பத்தி ஆடி 05 ( 21 - 07 - 1991 ) ஞாயிறு

# கட்டைக்காட்டில் நேற்று கடும் சண்டை மூண்டது

## படையினரின் முன்னேறும் முயற்சி புலிகளால் முறியடிப்பு

**கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலையில் கடும் சண்டை மூண்டதாக யுத்த முனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்த இராணுவத்தினரை மூன்று திசைகளில் சுற்றிவளைத்துள்ள புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர்.

இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி நேற்று மாலையில் முன்னேறமுயன்றபோதே இச்சண்டை ஆரம்பமானது.

விமானத் தாக்குதல்கள் மத்தியில் படையினர் முன்னேற முயன்றபோது புலிகள் சளைக்காது மோதினர். நேற்று இரவு வரை சண்டை தொடர்ந்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சண்டையில் படையினர் பலர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(79 50, 43, 12, ப-11)

## முல்லைத்தீவில் ஷெல் தாக்கு

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கி கடந்த சில தினங்களாக அடிக்கடி ஷெல் தாக்குதல்களைமேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் கடற்படையினரின் நடமாட்டமும் அதிகரித்து வருவதோடு கடற்படையினரும் குடிமனைகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனராம் 38

## 5 மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த ஐந்து மாவீரர்களின் புகழுடல்கள் நேற்று மக்கள் அஞ்சலிக்காக சுன்னாகம் நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டன.

அந்த மாவீரர்களின் பெயர் விவரம் வருமாறு:- கில்பேட் (மயில்வாகனம் விஜயகுமார் திருமலை), இலக்கியன் (கதிர்காமர் இரவீந்திரராஜா -அரியாலை), ராகுலன் (வேலாயுதம் ஜெயரூபன் - வாழைச்சேனை), பாபு (கந்தசாமி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## வதிரியில் ஹெலித்தாக்கு வயோதிபப் பெண் காயம்

வதிரி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்றுக் காலை ஹெலிக்கப்டர் ஒன்றிலிருந்து றொக்கட் தாக்குதல் நடாத்தப்பட்டதால் ஒரு பெண் காயமடைந்தார்.

சமையலறையில் வேலை செய்துகொண்டிருந்த திருமதி கணபதிப்பிள்ளை மீனாட்சியம்மா (65) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

சமையலறையும், அங்கிருந்த பெறுமதியான பொருள்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

அவ்வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடு ஒன்றும் காயமடைந்து பின்னர் இறந்துள்ளது. 39

## தாளையடி, செம்பியன்பற்றில் விமானத் தாக்குதலால் தேவாலயம் சேதம்

செம்பியன்பற்று, தாளையடிப்பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இருமணி நேரமாக விமானத்தாக்குதல்கள் கடுமையாக இடம்பெற்றன.

இரு பொம்மர்கள் குண்டுகளை வீச, இரு ஹெலிக்கப்டர்களில் இருந்து சரமாரியாக தாக்குதல் நடாத்தப்பட்டன.

தாளையடி தபாற் கந்தோர் பகுதியில் சிலரின் வீடுகள் சேதமுற்றன.

செம்பியன்பற்றில் உள்ள யாத்திரிகர் தலமான புனித பிலிப் நேரியர் தேவாலயமும் சேதமடைந்தது 79

## வயலில் குண்டு வீச்சு

நாகர்கோவில், குடாரப்பு பகுதியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது நேற்று ஹெலி

—04ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடியில் பொம்மர் மிரட்டல்

நெல்லியடியில் நீண்ட காலத்திற்குப் பின்பு நேற்று முற்பகல் பொம்மர் விமானம் ஒன்று வட்டமிட்டு குத்திச் சென்ற போதிலும் குண்டுகளைப் போடவில்லை.

இங்கு பொம்மர் வட்டமிட்டதைக் கண்ட பொது மக்கள் பாதுகாப்புத் தேடிச் சென்று ஒதுங்கிக் கொண்டனர். 50

## வீரமரணம்

மன்னார் வங்காலை படையினருக்கு எதிரான மோதலில் விடுதலைப்புலி வீரர் வீனஸ் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டார். ப 11

## வங்காலையில் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம்

வங்காலைப் பகுதியில் நேற்று படையினருடனான மோதலில் விடுதலைப் புலிகளால் அள்ளப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:

- ★ மினிமினி இலகு இயந்திரத் துப்பாக்கி - 1
- ★ ஏ.கே. இலகு இயந்திரத் துப்பாக்கி – 1
- ★ இதற்குரிய ரம் மகசின் - 2
- ★ ரி - 56 ரகத் துப்பாக்கி - 1
- ★ ரி. 56-2 ரகத் துப்பாக்கி-1
- ★ ரி- 81 ரகத் துப்பாக்கி - 1

—04ஆம் பக்கம் பார்க்க

## லண்டனில் வாழும் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளைக் கண்டித்துநேற்று லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

பிரிட்டிஷ் அரசு இலங்கையின்படுகொலைகளை நிறுத்த வேண்டும், இலங்கைக்கு எந்த உதவிகளும் செய்யக் கூடாது, பிரிட்டனில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பக் கூடாது என்று இந்த ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தின்

—04ஆம் பக்கம் பார்க்க

## தாளையடியில் நேற்றும் அவ்ரோ குண்டு வீச்சு

தாளையடியில் அவ்ரோ விமானம் நேற்று வீசிய குண்டு வீச்சில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம், களஞ்சியம் உட்பட பெருமளவு வீடுகளும் சேதமடைந்துள்ளன.

தமிழர் புனர் வாழ்வுக்கழக

—04ஆம் பக்கம் பார்க்க

## வங்காலையில் நேற்றும் மோதல் 6 படையினர் பலி, ஆயுதங்கள் மீட்பு

இரண்டாவது நாளாக நேற்றும் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய படையினருடன் விடுதலைப் புலிகள் மோதினர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் இம்முகாமிலிருந்து வெளியேறிப் பிரதான வீதியூடாக வந்த படையினரை புலிகள் வழிமறித்துத் தாக்குதல் தொடுத்தபோது ஆறு படையினர் கொல்லப்பட்டனர்.

புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத படையினர் இறந்த தமது சகாக்களின் சடலங்களையும், ஆயுதங்களையும் கைவிட்ட நிலையில் முகாமுக்குப் பின்வாங்கிச் சென்றனர்.

படையினர் கைவிட்டுச் சென்ற ஐந்து சிப்பாய்களின் சடலங்களையும், ஆயுதங்களையும் புலிகள் மீட்டுள்ளனர். ப11

விடுதலைப் புலிகளின் கலை - பண்பாட்டுக் கழகம் எடுத்த முத்தமிழ் விழாக்கவியரங்கில் உதிர்த்த முத்துக்கள் சிலவற்றைக் கோத்துத் தருகிறோம்:

கோவை - 6

## வேரடியை நோக்கி......

ஆலமரம் விழுதுகளை ஆக்குவதும் ஏன்? - அது
தான்தளரும் போதினிலே தன் கிளையைத்
தாங்குமென்று
ஆலமரம் விழுதுகளை ஆக்குவது பார்!
ஆக்குகிற விழுதுகளோ, ''ஆம்; எனது
தாய்மரத்தைத்
தூக்குதல் என்கடன்''! என்று
துணிவோடு நீள்கிறதா? இல்லை! இல்லை!
இடைநடுவிற் கூழைகளாய்
எத்தனையோ தூங்குது பார்

□ □ □

முன்னே கிளைபரப்பி முகம்மலர இலைசிரித்துக்
கண்ணே! எனவளர்த்த விழுதுகள்கால்
ஊன்றாமல்;
மண்ணை நினைக்காமல், மரங்களையே
வருத்தியதால்
என்னே! எமக்கின்று, இந்நிலைமை ஆனதென்று
கண்ணீர் சொரிந்து ஆல மரங்கள் கலங்குது பார்!
கண்ணீர் சொரிந்து ஆல மரங்கள் கலங்குவதேன்?
மண்ணோக்கி விழுதுகளை வேரூன்ற
வைத்திருந்தால்;

□ □ □

கண்ணீர் சொரிந்து ஆல மரம் கலங்கத்தேவை
யில்லை!
ஆலமரத்தலை முறைகள் அண்ணாந்துபார்க்க
முனம்
வேரடியை நோக்கி விழுதுகளைத் தூதனுப்பி
நாம்நிலைக்க வேண்டுமென்று நினைத்திருந்தால்
இன்று
காற்றடிக்கும் போது, கதிகலங்கத் தேவையில்லை!
தள்ளாடிமனம் பதறித் தலைவிரிக்கத்
தேவையில்லை!
எல்லோரும் வெயிலென்று ஏங்கியழத்
தேவையில்லை!

□ □ □

என் செய்வோம்? என்செய்வோம்?
எண்ணரிய விழுதுகளே!
ஆலமரம்மறந்து அண்ணாந்து போனாலும்,
நாமிறங்க வேண்டும்; நம்மண்ணைத் தொட
வேண்டும்!
இன்னுஞ் சிறிதாக இருக்கும் விழுதுகளும்,
எம்மைப் போலேங்கி அலைதல் கூடாது!

— நாக. சிவசிதம்பரம்

## தொழிற்சங்கப் பொதுக்கூட்டம்

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் தெல்லிப் பழைக் கிளையின் பொதுக் கூட்டமும் நிர்வாக சபை தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்க மண்டபத்தில் தொழிற் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறுகின்றது.

### தபால்கள் தேக்கம்

முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பல தபாற் பொதிகள் ஊரடங்கு காரணமாக வவுனியா தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (38)

## உலர் உணவு

ஆனையிறவு முகாம் தாக்குதல், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் மேற்கெல்லைக் கிராமங்களில் முகாம்களில் தங்கியுள்ள போக்கறப்பு, முள்ளியான், வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை வத்திராயன், மருதன்கேணி கிராமசேவை அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 1997 குடும்பங்களுக்கும் ஒரு வார உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## எண்ணமெலாம் நின்தவிலின் நாதமாரி!

நல்லிணுவை யூர்செய்த தவப்ப யனாய்
நானிலத்தில் உதித்தபெருந் தவில் கலைஞன்
வல்லவனாம் சின்னராஜா வழங்கு தவில்
வானவரும் மகிழ்ந்திடவே விண்ணு லகில்
சொல்லழகன் லயநாத பூப தியாம்
சொரியுதவில் தக்ஷணா மூர்த்தி யோடு
வெல்லுதவில் கச்சேரி நடாத்த வேண்டி
விண்ணுலகு சென்றனையோ தவிலின் செல்வா!

மண்ணுலகை விண்ணுலகு ஆக்கி நாதம்
மன்னிடவே செய்தனையே சின்னராஜா
கண்ணிமைக்கும் பொழுதினுள்ளே கலை நுணுக்கம்
கணிதலய அக்ஷரங்கள் தாளத்தோடு
வண்ணமுற விவகாரத் தவிற்சொற் கட்டு
வழங்கினையே மறப்போமோ நாத வின்பம்
எண்ணமெலாம் நின்தவிலின் நாத மாரி
என்றென்றும் நம்மனத்தே நிறைபே ரின்பம்

- கவிமாமணி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

# சின்னஞ் சிறு செய்திகள்

## ஆசி வேண்டி அபிஷேகம்

போராளிகளின் வெற்றிக்காக ஆசி வேண்டி சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 23ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆலய தர்மகர்த்தாவின் தலைமையில் விஷேட அபிஷேகமும், பூஜையும் இடம்பெறவுள்ளன.

திருமதி மோகனாம்பிகை கணேசன், ஆத்மஜோதி மூத்தையா ஆகியோர் நடாத்தும் கூட்டுப் பிரார்த்தனையும், அபிராமி அந்தாதி பாராயணமும் அன்று அங்கு இடம்பெறும்.

## கூட்டுறவு கல்லூரி விரிவுரைகள்

தற்போதைய சூழ்நிலையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கூட்டுறவு தராதரப் பத்திரத்துக்கான உயர் பிரிவு விரிவுரைகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

கனிஷ்ட பிரிவு கூட்டுறவுப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் சங்கப் பணிப்பாளர்கள் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் கூட்டுறவு தராதரப் பத்திரம் சாதாரண பிரிவுக்கான பரீட்சை ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அனுமதி அட்டைகளை 31 ஆம் திகதி கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அதிபர் அறிவித்துள்ளார்.

## சங்கீதசபை வைரவிழா

வடஇலங்கைச் சங்கீதசபையின் வைரவிழாவை விரைவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விழாவில் சபை ஆரம்பத்திலிருந்து (தரம் ஆறு) ஆசிரிய தரத்தில் சித்தியடைந்தவர்களை அழைத்துக் கௌரவித்தலும் ஓர் அம்சமாக இருப்பதனால் ஆசிரியர் தரம் சித்தியெய்திய சகலரும் (இளைப்பாறியவர்கள் உட்பட) தமது பெயர் விலாசம் மற்றும் விவரங்களைக் கல்வித் திணைக்களத்திலுள்ள வடஇலங்கைச் சங்கீத சபை அலுவலகத்திற்கு இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## அகதிகளுக்கு குடியிருப்புக்கள்

திருகோணமலை மாவட்டத்தில் இருந்தும், குடாநாட்டின் வேறு பகுதிகளில் இருந்தும்இடம்பெயர்ந்து வந்துள்ள பொதுமக்களுக்கு சுன்னாகம் கந்தரோடையில் இரண்டு இடங்களில் சுமார் 50 சிறிய ஓலை வீடுகளைச் செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுத்துள்ளது. (ப- 10)

## உ. அ. அதிபர்கள் இடமாற்றம்

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் எஸ். சுந்தரன் முல்லைத்தீவு செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபராகவும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் இ. கிருஷ்ணபிள்ளை செயலக உதவி அலுவலராகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களது இடத்திற்கு புதிய உதவி அரசாங்க அதிபர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (38)

## வழமைபோல்

வடமராட்சியில் பாடசாலைகள் யாவும் கடந்த வெள்ளிமுதல் வழமை போல் இயங்கி வருகின்றன. (39)

## பழைய மாணவர் பொதுக்கூட்டம்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது (ப 10)

## உரும்பிராயில் விளையாட்டு விழா

உரும்பிராய் றோ. க. த. கவின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி முதன் முறையாக அண்மையில் வித்தியாலய முன்றலில் அதிபர் கா. இராசகோபால் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின் பிரதம விருந்தினராகக் கொத்தணி அதிபர் சி. பாலசுப்பிரமணியமும் கௌரவ விருந்தினராக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய பங்குத் தந்தை அருட் திரு நேசரா அடிகளாரும் கலந்து கொண்டனர். (23)

# போராளிகளுக்கான உதவிகளை ஒழுங்கு முறையில் வழங்கக் கோரிக்கை

எமது மண்ணை எதிரியிடமிருந்து மீட்டெடுப்பதற்கான போர் முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு உக்கிரமாக நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், பொது மக்களின் பேராதரவு பிரவாகமாக ஊற்றெடுத்துள்ளமை புலனாகிறது. நாம் எதிர்பாராத அளவிற்கு அவர்கள் பல வகைகளில் உதவி நல்கிவருவது எமக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் ஊட்டுகிறது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரை முன்னெடுத்துச் செல்வதற்கு தற்போது அவசிய தேவையான வெற்றுச்சாக்கு, சாக்கூசி, உரப்பை, மண்வெட்டி, சவள், பிக்கான் போன்ற உபகரணங்களைத் தாராளமாக வழங்கி வருவதன் மூலம் பொதுமக்கள் உற்சாகமாக ஈடுபட்டு வருகின்றார்கள் எனினும், மண்வெட்டி, சவள் போன்ற உபகரணங்கள் மேலும் தேவைப்படுவதால் கூடிய எண்ணிக்கையில் வழங்குமாறு வேண்டுகிறோம்.

போர் முனையில் போராளிகள் உண்பதற்கு ஏதுவாக தயாரிக்கப்பட்ட பல்சுவை சிற்றுண்டி வகைகளை வழங்கி வருவதன் மூலம் பொதுமக்கள் தங்கள் பாச உணர்வை வெளிக்காட்டி வருகின்றார்கள். இவைகளுள் சிலவகை சிற்றுண்டிகள் குறுகியகால எல்லைக்குள் பழுதடைந்து போகக் கூடியவைகளாகையால் பகோடா, முட்டை மாவு, சிப்பி, முறுக்கு, மிக்சர் போன்ற நீண்ட காலத்திற்குப் பேணக்கூடிய உணவுகளையே தயாரித்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மக்கள் வழங்கும் நன்கொடைகள் யாவும் எமது செயலகங்களில் வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றன. இவைகளை ஒரு ஒழுங்கு முறையில் பெற்று, வழங்குவதற்குத் திட்ட அடிப்படையில் செயலாற்ற வேண்டிய கட்டாய தேவை ஏற்படுகிறது

எனவே பொது நிறுவனங்களும், பொதுமக்களும் தங்கள் பங்குகளை அளிக்க முன்வரும்போது சம்பந்தப்பட்ட சிற்றூரவைத் தலைவர் / செயலாளருடன் தொடர்புகொண்டு ஒன்றிணைந்து ஓர் செயற்திட்டம் மூலம் ஒழுங்கு முறையில் செயற்பட்டு எமது கிராம, வட்ட, மாவட்டச் செயலகங்களில் வழங்குமாறு வேண்டுகிறோம்.

உபகரணங்கள், சிற்றுண்டி வகைகள் வழங்க முன்வரும் பொதுமக்கள் எமது மாவட்டப் பொறுப்பாளரால் ஒப்பமிடப்பட்ட அடையாள அட்டை காண்பிப்பவர்களிடமே வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சாரம், படுக்கை விரிப்பு, படுக்கைமெத்தை, தலையணை போன்ற நன்கொடைகளை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பாலம் பொதுப் பணி மன்றத்தில் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர் கவனத்திற்கு
மனைக்கு வெளியே ஒரு மனை,
அந்த மனையில்
ஒருநாள் பொழுதைக் கழியுங்கள்
ஆம்
ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்
நீங்களும் அந்த மனைக்கு ஒரு முறை
அழைக்கப்படுகின்றீர்கள்
ஜெசித்தாரா
உள்ளூர் உணவகம்
19 / 3, கொழும்புத்துறைச்சாலை
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
உங்கள் உணவு வகைகளுக்கு நாங்கள் மேலும்
சுவையூட்டுகிறோம்.
பார்சல் ஒன்று 29 . 50 மட்டுமே
விளம்பர அமைப்பு: செனித் விளம்பர முகவர்
07092

முரசொலி

எமது சிந்தனை

21 . 7 . 91

## வெற்றி நமதே

தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு தொடுத்த யுத்தம் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. ''ஒப்பரேஷன் பலவேகய'' இப்போது ஆனையிறவை நோக்கி நகரப்பார்க்கிறது.

ஆனையிறவு முகாமில் சிக்கியுள்ள இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்குத் தற்போது ஸ்ரீலங்கா அரசு எடுக்கும் இராணுவ நடவடிக்கைதான் இந்த ஒப்பரேஷன் பலவேகய.

யாழ் குடாநாட்டையும் இலங்கையின் இதரபாகங்களையும் பூகோளரீதியில் இணைக்கும் ஆனையிறவு முக்கியமான போக்குவரத்துக் கடவை.

இன்று இராணுவ கேந்திரமாக மாறியுள்ள ஆனையிறவு 1977க்கு முன்பு பொலிஸ் பரிசோதனை முகாமாகவே இருந்தது.

தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி, மிரட்டுவதே லட்சியமாகக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா அரசு 1977இல் அதை இராணுவ முகாமாக்கியது.

அன்றைய காலகட்டத்தில் இராணுவமும் பொலிஸ் படையும் யாழ்குடா நாட்டில் தனிக்காட்டு ராஜாக்களாகத் திகழ்ந்தன. எங்கும், எப்போதும் இராணுவ முகாம் அமைத்து மக்களை அடக்கி ஆளலாம் என்ற நிலைப்பாட்டை அரசு கொண்டிருந்தது.

தமிழரை எப்போதும் மிரட்டியும், அடக்கியும் பணிய வைக்கலாம் என்ற உணர்வு வேரூன்றியிருந்தது. ஒரு முகாமையே முற்றுகையிடும் மனோபலத்தையும் இராணுவ தந்திரோபாயத்தையும் பெறக்கூடிய எந்த ஒரு தமிழனும் இருக்க மாட்டானென்ற அசையாத நம்பிக்கை இராணுவத்துக்கும் அரசுக்கும் அப்போது இருந்தது.

இராணுவ முகாம் ஒன்று அமைப்பதற்குமுன் பல விடயங்கள் பரிசீலிக்கப்படும். உணவு, குடி தண்ணீர் விநியோகம் இராணுவ தளபாட விநியோகம், போக்குவரத்து ஆகியன முக்கியமானவை.

தரைமார்க்க விநியோகம் துண்டிக்கப்படும் நிலை வரும் என அரசு நினைத்தும் பார்க்கவில்லை. அந்த ஆற்றல் எவருக்கும் கைவராதென்ற எண்ணம் வேரூன்றியிருந்ததே. காரணம் தங்களைத் தடுக்கவோ எதிர்க்கவோ யாருமில்லையென அன்று கருதிய இராணுவம் இப்போது தளம்பிய நிலையில் உள்ளது.

தங்களது ஆயுத பலத்தையும் இராணுவ பலத்தையும் புலிகள் துச்சமாக மதித்துப் போராடுவதைக் கண்டு அரசு திகைக்கிறது. படைப் பலத்தைக் காட்டிப் போராளிகளை அடக்கி விடலாமெனக் கனவு கண்ட சிங்கள அரசு புலிகளின் எதிர்த் தாக்குதலைக் கண்டு நிலைகுலைந்துள்ளது.

''புலிகள் ஆனையிறவு முற்றுகையைத் தளர்த்தினால் குண்டு வீசுதலை நிறுத்துவோம்'' என ரணதுங்க தெரிவித்துள்ளதானது 'முற்றுகையைக் கைவிடுங்கோ' என்று புலிகளைக் கோருவதாக அமைகின்றதைப் பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் இராணுவத்தைக் கண்டதும் இளைஞர்கள் ஓடி ஒளிந்தார்கள். இப்போ இளைஞர்களைக் கண்டு இராணுவம் ஓடி மறைகிறது புலிகளோடு போரிடப் பயந்து ''சிக் லீவு'' போட்ட இராணுவ அதிகாரிகள் பலர்.

காலம் மாறிவிட்டது. எதிரியைத் துவம்சம் செய்ய இளைஞர்கள் துடிக்கிறார்கள்.

அதுதான் இப்போது நடைபெறுகிறது. இந்தப் போர் மக்கள் பங்களிப்புச் செய்யும் போராக உருவெடுத்துள்ளதைப் பார்க்கிறோம். யாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து உணர்ச்சி வேகத்துடன் போர்க்கால சேவையில் ஈடுபட்டுள்ளார்கள்.

போராளிகளுக்காக வீட்டுக்கு வீடு சிற்றுண்டி வகைகளும் அரண் பாதுகாப்புக்குரிய சாதனங்களும் சேகரிக்கப்படுவதைப் பார்க்கும்போது மக்கள் புலிகள் பக்கம் என்பது புலனாகிறது. வாழ்வும், தாழ்வும் அவர்களுடனேயே என்ற மன எழுச்சியுடன் இதற்கு முன் எப்போதுமில்லாதவாறு அவர்கள்பின் அணிதிரண்டு நிற்பது தெரிகிறது.

இரண்டாம் உலகப் போரின்போது பிரான்ஸைக் கைப்பற்றிய ஹிட்லர் பிரிட்டனையும் கைப்பற்ற எண்ணி லண்டன் மாநகர் மீது குண்டுமாரி பொழிந்தான். ''வெற்றி நமதே'' எனச் சேர்ச்சில் அறைகூவி மக்களைத் தட்டியெழுப்பினார். மக்கள் அவர் பின் அணிதிரண்டு நின்றனர்.

லெனின்கிறாடை நெருங்கிய ஹிட்லரின் படைகளைக் கண்டு சோவியத் மக்கள் நிலை குலையாது, மனம் தளராது எதிர்த்துப் போரிட்டு விரட்டி அடித்தனர். அந்தப் படுதோல்வியே ஹிட்லரின் வீழ்ச்சிக்கு அடிகோலியது. இப்போது எதிரி யாழ்குடாநாட்டு வாசலில் நிற்கிறான். சோவியத் மக்கள் போல, பிரிட்டிஷ் மக்கள் போல் மன உறுதியுடனும், மனோபலத்துடனும் ''ஒப்பரேஷன் பலவேகய'' வைத் தவிடுபொடியாக்குவோம்.

ஆனையிறவின் வீழ்ச்சி அதிக தூரத்தில் இல்லை.

★ சைவக்குருமார் சங்கம் கண்டனம்

# இந்து ஆலயங்களைத் தாக்குவது உலகத்தமிழர்களைப்புண்படுத்தும்

''ஆலயங்களை ஸ்ரீலங்கா ராணுவம் தாக்குவது தமிழீழ மக்களை மட்டுமல்ல அகில உலக தமிழ் மக்களையும் புண்படுத்தும் செயலாகக் கருதப்படுகின்றது.''

இவ்வாறு அகில இலங்கைச் சைவக் குருமார் சங்கம் தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் வல்லிபுர ஆழ்வார் ஆலயக் கோபுரத்தை நோக்கி வீசப்பட்ட குண்டு தெய்வாதீனமாக அரசமரம் ஒன்றின்மேல் விழுந்து வெடித்ததால் ஆலயம் சிறு சேதத்துடன் தப்பியது என்றும், ஆலயத் தாக்குதல்கள் ஏற்கனவே மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில், வல்வை சிவன் கோவில், வல்வை முத்துமாரி அம்மன் கோவில், நெடிய காட்டுப் பிள்ளையார் கோவில் ஆகியவற்றில் இடம் பெற்று அவை பாரிய சேதம் அடைந்துள்ளன என்றும் குறிப்பிட்ட அந்த அறிக்கை இனிமேலாவது இது போன்ற தெய்வ நிந்தனையை ஸ்ரீலங்கா அரசு தானாகவோ, இராணுவ மூலமாகவோ செய்யாது இருக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளது.

## மாலைதீவு தடுத்துவைத்துள்ள படகுகளை விடுவிக்க முயற்சி

மாலைதீவில் பிடிபட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் படகுகளை விடுவிப்பது குறித்து வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட்ஹேரத் மாலைதீவு ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 'சார்க்' உச்சி மாநாடு பற்றிப் பேச்சு நடாத்த அவர் மாலைதீவுக்குச் சென்றிருந்தார்.

மாலைதீவு எல்லைக் கடற் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோதே இவர்கள் பிடிபட்டனர்.

மீனவர்கள் விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (33)

## தானம் செய்ய பலர் ஆர்வம்

வல்வையில் இரத்த தானம் செய்யப் பலர் முன்வந்துள்ளனர்.

வல்வைக் களத்தாய் படிமி பகத்தார் இரத்த தானம் செய்ய முன்வருபவர்களின் பட்டியலைத் தயாரித்து அவர்களிடம் இரத்தம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (39)

## இங்கு மின்சாரம் இல்லை அங்கு சிவப்பு நோட்டீஸ் இல்லை

இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத்தை அதற்கான அறிவித்தல் கடிதம் கிடைத்ததும் செலுத்த வேண்டும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

முன்னர் கட்டணம் செலுத்தாவிடில் சிவப்பு நோட்டீஸ் அறிவித்தல் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டு வந்தன.

இனிமேல் சிவப்பு நோட்டீஸ் அனுப்பப்பட மாட்டாது எனவும் மின்சார சபை அறிவித்துள்ளது.

## தமிழக உள்ளாட்சிகளுக்கு ஆகஸ்ட் 30 இல் தேர்தல்

தமிழ் நாட்டில் உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் உட்பட 99 நகரசபைகள், 384 ஊராட்சி ஒன்றியங்கள், 12627 கிராம பஞ்சாயத்துக்கள் 632 நகரபஞ்சாயத்துக்கள் ஆகியவற்றுக்கு இத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

தமிழ் நாட்டில் உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் இறுதியாக 1986 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டிருந்தது.

## கிலோ 6 ரூபா

தற்போது வல்லைவெளியில் விளைந்த உப்பு வல்லை வெளியில் வைத்தே கிலோ 6 ரூபாவாக அப்பகுதி மக்களால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (39)

## காயமடையும் போராளிகளை வர்த்தகர் சங்கம் பராமரிக்கும்

ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்றுவரும் மோதலின் போது காயமடைந்த போராளிகளில் தென்மராட்சிப் பகுதிக்குக் கொண்டு வரப்படும் காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பையும் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் ஏற்றுள்ளது.

இதே வேளையில் தென்மராட்சிப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் தமிழீழக் காவல் துறையினருக்குரிய பராமரிப்புச் செலவுகளையும் சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கமே பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ப 5)

## வவுனியாவீடமைப்புத்திட்டத்தில் சிங்களவருக்கே அதிக வீடுகள்

வவுனியா நகரில் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தில் பெரும்பான்மை இனத்தவர்களுக்கே அதிக வீடுகள் ஒதுக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நகரில் வீடமைப்பு அபிவிருத்திக்கெனத் துரித திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் இவற்றில் சிங்களவருக்கே முன்னுரிமையும், கூடுதல் சலுகையும் அளிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது. (38)

## கொடுப்பனவு

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான தொழு, காச, புற்று நோயாளர்களுக்கான மாதாந்தஉதவிப் பணத்தைப் பலர் இதுவரை பெறவில்லை எனவும் உடனடியாக இதனைப் பெற்றுக்கொள்ளுமாறும் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் கேட்டுள்ளார்.

## பதுக்கினால் தண்டனை

இப் போர்க்கால வேளையில் பொருள்களைப் பதுக்கி வைத்தல், கூடிய விலைக்கு விற்றல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் வர்த்தக சங்கம் அப்பகுதி வர்த்தகர்களுக்கு இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளது. (ப 10)

## ஆங்கிலப் பிரிவு மாணவர்க்கு

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி ஆங்கிலப் பிரிவுமாணவர்க்கு யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயிலும் ஆங்கிலப் பகுதி மாணவர் அனைவரையும் 22ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரிக்குத் தவறாது சமுகம் தருமாறு ஆங்கில இலக்கிய மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

## தற்கொலையிலும் 'சாதனை'! ஸ்ரீலங்காவுக்கு 3 ஆவது இடம்

தற்கொலை செய்து கொள்வோரின் விகிதாசாரத்தில் இலங்கை உலகில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

1990 ஆம் ஆண்டில் மட்டும் இலங்கையில் 990 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸ் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

தற்கொலை செய்து கொண்டோரில் அநேகமானோர் தங்கள் உயிரைப் போக்கிக்கொள்ள கிருமிநாசினிகளையும், நச்சுத்திரவங்களையுமே பயன் படுத்தியுள்ளதாக வைத்திய அறிக்கைகள் மூலம் தெரியவருகின்றது.

ராஜீவ் காந்தி படுகொலை

## சந்தேக நபர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான சண்முகம் என்பவரின் சடலம் வேதாரணியம் காட்டுப்பகுதியில் மரத்தில் தொங்கிய நிலையில் நேற்று தமிழ்நாடு பொலிஸாரால் மீட்கப்பட்டது

இவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாகப்பொலிஸார் தெரிவித்தனர்.

கோடிக்கரை காட்டுப்பகுதியில் உள்ள அரச கட்டிடம் ஒன்றில் இவர் விசாரிக்கப்பட்டு வந்ததாகவும், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கட்டிடத்திற்கு அருகில் உள்ள காட்டுப்பகுதியிலேயே இவரது சடலம் மீட்கப்பட்டதாம். ப-11

## ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள்

ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிகள் திட்டமிட்டபடி நடைபெறும் என ஆங்கிலக்கல்வி அதிகாரி திரு. தியாகராசா தெரிவித்துள்ளார்.

நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண வட்டார ஆசிரியர்களுக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும், 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மானிப்பாய் வட்டார ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியிலும், 24 ஆம் திகதி புதன்கிழமை கோப்பாய் வட்டார ஆசிரியர்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7 ஆம், 8 ஆம், 9 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தத்தமது வட்டாரங்களில் நடைபெறும் சேவைக்காலப் பயிற்சியிலே தவறாது கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது' (37)

## பருத்தித்துறை துறைமுகத்துக்கு உணவுக் கப்பல் வரும்?

பருத்தித்துறை துறைமுகத்துக்கு உணவுக் கப்பல்களை கொண்டுவர உலகதொண்டர் நிறுவனம் ஒன்று முயற்சி எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரடங்குச் சட்டம் காரணமாக பருத்தித்துறைக்கு வந்த கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்டமை தெரிந்ததே.

யாழ்: மாவட்டத்தின் உணவு நிலமை குறித்து அரசாங்க அதிபரும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்துள்ளார். 74

## 90 ஆம் நாள் நினைவலைகள்



சிவசுப்பிரமணியம் சிவரூபன்

உதயம் : 29 - 07 - 1974

அஸ்தமனம்: 23 04 - 1991

பிறப்பும் இறப்பும் ஆண்டவன் நியதி
வாழ்க்கையெனும் நாடகத்தில்
நீ எடுத்த பாத்திரத்தை விரைந்தே
முடித்து விட்டு விண்ணுலகம்
சென்று விட்டாய் உன் கடமை முடிந்ததென்றா

அன்பு முகம் காண ஏங்கும் அன்னை, சோதரரும், உற்றாரும், உடனிருந்த நண்பர்களும் உன் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர், நண்பர்கள்

07095

# வடமராட்சி கிழக்கில் இருந்து மேலும் மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சி கிழக்கில் தற்போது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையின் எதிரொலியாக இப்பிரதேசத்தின் மருதங்கேணி தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான எட்டுக் கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலிருந்தும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்த இக்குடும்பங்கள் இப்பிரதேசத்திலுள்ள செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோயில், அம்பன், குடத்தனை, மணல்காடு ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளிலும், உறவினர், நண்பர் வீடுகளிலும் ஆலயங்களிலும் தங்கியுள்ளனர்.

இதேவேளை பளைப் பகுதியிலுள்ள இயக்கச்சி சங்கத்தார் வயல், கோவில்வயல் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் ஆனையிறவு இராணுவ நடவடிக்கை காரணமாக நாகர்கோவில், அம்பன் ஆகிய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இது இப்படியிருக்க வடமராட்சி கிழக்கில் இடம்பெற்று வரும் விமானத்தாக்குதல்கள் தற்போது இப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டுவருதால் செம்பியன்பற்று கிராமத்தைச் சேர்ந்த மக்களும் இடம் பெயர்ந்துவருகின்றனர். 50 43

## வங்காலையில்...

★ இதற்குரிய ரவைக் கூடுகள் - 5
★ ஏ. கே. ரவைக் கூடுகள்-10
★ ஆர். பி. ஜி எறிகணைகள் - 4
★ ஆர். பி. ஜி புறொப்ளர் - 4
★ நடுத்தர ரவைகள் - 3900
★ 40 மி. மீ. எறிகணைகள் - 1
★ ரவைக் கோவைகள் - 290
★ 5.56 ரக ரவைக் கூடுகள் - 335
★ ஜே. ஆர். ரகக் கைக்குண்டுகள் - 8
★ 60 எம். எம். எறிகணைகள் - 3
★ ரி. 81 ரக எறிகணைகள்-1
★ வி. ரி. ரவைகள் - 190
★ தொலைத் தொடர்பு சாதனம் - 1 (ப - 11

## 5 மாவீரர்...

ஆனந்தன் - கிரான்), றொபின்சன் திருமேனிப்பிள்ளை கிருபாகரன் - மட்டக்களப்பு)

அஞ்சலிக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இதில் விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களான பரா, குகதாஸ் மாஸ்டர், மோகன், பிரியா ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர்.

இதன் பின்னர் 5 மணியளவில் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீயுடன் சங்கமமாகின. (05)

## தகவல் தாருங்கள்

பளை, வெற்றிலைக்கேணியில் கடந்த 14-07-91 ஞாயிறன்று நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட இராசப்பு இராசேந்திரத்தின் மனைவி மகேஸ்வரியும், 3 பெண், 3 ஆண் பிள்ளைகளும் காணாமல் போய்விட்டார்கள். இவர்கள் எங்கிருந்தாலும் பளை, தம்பகாமத்திலுள்ள அருளம்பலம் என்பவரின் வீட்டில் தற்போது தங்கியிருக்கும் இராசேந்திரத்திடம் உடன் வரவும். அல்லது இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் பளை, ஆனந்தபவான் (முருகா) தேநீர்க்கடையில் அறிவிக்கவும். 07094

பிரேமாவிடம் உறவினர் கோரிக்கை

## தலைவர் பிரபாகரனுடன் பேசி இராணுவத்தை மீட்கவும்

ஆனையிறவு முகாமினுள் சிக்கியுள்ள இராணுவத்தினரை மீட்டுத் தருமாறு ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அந்த இராணுவத்தினரின் உறவினர்கள் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள ஆனையிறவு முகாமினுள் இருக்கும் தமது சிங்களப் பிள்ளைகளை மீட்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

## வெடிக்காத பீப்பாய் குண்டு செம்பியன்பற்றில் மீட்பு

செம்பியன் பற்றில் அகதி முகாம் அருகே அவ்ரோ விமான மூலம் வீசப்பட்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது

இக்குண்டு சில்லுகள் பூட்டப்பட்டு உருட்டிச் செல்லக் கூடிய நிலையில் இருந்ததாகத் தெரியவருகின்றது. தற்போது சில்லுகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. 50 ,43

## வயலில்...

யிலிருந்து றொக்கட் குண்டு வீசப்பட்டது.

இக்குண்டு விவசாயிகள் நின்ற இடத்துக்கு சற்று தூரத்தில் விழுந்து வெடித்தது. இதனால் சேதமேதும் ஏற்படவில்லை. 50, 43

## தாளையடியில்...

அலுவலகத்திற்கும் களஞ்சியத்திற்கும் பெருமளவு சேதமேற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை தாளையடியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையும் செஞ்சிலுவைச் சங்க களஞ்சிய அறையும் ஏற்கனவே குண்டு வீச்சினால் பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது 43, 50

## ரூபவாஹினியில் கொப்பேகடுவ

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணிப்பகுதியில் கரையிறக்கப்பட்டுள்ள இராணுவத்துடன் வடபகுதி இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ காணப்படுவதை ரூபவாஹினிச் செய்தி ஒளிபரப்பில் காண்பிக்கப்பட்டது.

## லண்டனில்...

எட்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டே இந்த ஊர்வலம் நடைபெற்றது.

அனைத்துலக தமிழர் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

எங்களுக்கு என ஒரு தனி நாடு வேண்டும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு எதிராக நாம் போராட வேண்டும் என்று அதில் கலந்துகொண்ட பெண்மணி ஒருவர் கூறினார்.

போர்த்துக்கேயர் காலந்தொட்டு
இராணுவ கேந்திரமாக விளங்கி
களம் பல கண்ட

ஆனையிறவு!

இன்று
ஸ்ரீலங்காவின் முப்படைகளுக்கும்
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும்
இடையில் நடக்கும்
பலப்பரீட்சையின்
களமாக உலகின் கவனத்தை ஈர்த்துள்ள

ஆனையிறவு!

முரசொலி நேயர்களுக்கு அறிமுகமான
எழுத்தாளர் 'அரவிந்தன்'' எழுதும்

ஆனையிறவு

ஒரு வரலாற்றுத் தகவல் தொடர்!
நாளைய முரசொலியில்!

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 21.07.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.